முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1043

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.08.2022, ஞாயிற்றுக்கிழமை

1. கருணைவடிவாய் வந்த குருவே
கலியிடர் வெல்லும் ஞான குருவே
தர்மபலம் கொண்ட மாதவசியே
தரணியோர்க்கு உயர்வழிகாட்டும் ஞானியே
2. ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
பெருமைபட ஞான அறிவுரை ஆசி
புகலுவேன் சுபகிருது நள்ளி திங்கள்
3. திங்களிலே அரங்கனுக்கு சக்தி கூட்ட
தெரிவிப்பேன் ஆறுமுகன் தொடர்ந்து ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 22 நாள், 07.08.2022 ஞாயிற்றுக்கிழமை)
ஆசி தனை அரங்கன் பலம் கூட அனுதினமும் சூட்சும சக்தியாக
நேசமுடன் வாசியில் கலந்து இனிதே நித்தம் நித்தம் ஆற்றல் கூட்டி வருகின்றேன்
4. வருகவே அரங்கனின் தேகமனோபலம் அனைத்து மகா சக்திகளையும்
ஆறுமுகன் ஆற்றல்பட இயக்கி வழிநடத்த
நடத்துகின்ற அரங்கன் சொல்செயல்கள் அனைத்தும்
ஞானமாக உலகை காக்கக்கூடும்
5. கூடவே அரங்கன் திருவடி பற்றி
குவலயத்தில் தொடருகின்ற மக்களெல்லாம்
ஈடேற்றம் ஞானவழி சடுதி காணக்கூடும்
இந்த உலகமாற்றம் நிகழ்வில் அரங்கன் தொண்டர்களெல்லாம்
6. எல்லோரும் ஞானிகளாக உயர்வு பெற்று
யுகத்திலே ஞான ஆட்சி நடத்தக்கூடும்
கூடவே ஆறுமுகன் என் ஆணையாக
குருஅரங்கன் வழி உலகோர் தொடர்ந்து வந்து
7. வந்துமே நாடெங்கிலும் தர்மமும் சன்மார்க்க நெறியும்
ஞானமாக நம்பிக்கை தரும் மார்க்கமாக தொடர
தொடரவே கலியின் துன்பம் ஓடும்
தொடரவே அரங்கன் வழி ஞான ஆட்சி மலரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–